# மாகாண கல்வித் திணைக்களம் சபரகமுவ - வாராந்த பாடசாலை

## பாடம்: தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

## தரம்: 09

## வாரம்: 3ம் வாரம்

- இக்கால கட்டத்தில் அனைத்து பாடங்களிலும் மீட்டல் செயற்பாடுகளில் மேற்கொள்வதினூடாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவது உமது பொறுப்பாகும்.
- கீழ்வரும் பயிற்சிகளை செய்வதற்காக பாடப்புத்தகத்தில் மின் விரிதாள் பாடத்தில் 22 தொடக்கம் 28ஆம் பக்கங்கங்கள் வரை நன்கு வாசித்து பயிற்சிகளில் ஈடுபடவும்.
- இச் செயற்பாட்டிற்காக ஒரு வார காலம் உங்களுக்கு வழங்கப்படும்.
- உங்களின் விடைகள் மற்றும் செயற்பாடுகளை **மூன்றாம் வாரம் - ICT உங்களின் பெயர் மற்றும் தரம்** என்பவற்றை குறிப்பிட்டு கோப்பாக செய்து வைக்கவும்.

➢ சமன் பெரேரா என்பவர் ஒரு அரிசி வியாபாரி. அவரின் வியாபாரத்தில் 2021 ஜனவரி மாதத்திற்கான வரவு மற்றும் செலவு விபரம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய கணக்குப் பதிவுகள் கணக்கீட்டுப் புத்தகத்தில் எழுத்து மூலமாக எழுதி வைக்கப்படுகிறது.

| செலவு | வரவு |
|---|---|
| 01/01 சம்பா அரிசி 1000kg ரூ.120000.00 | 01/05 சம்பா அரிசி 350kg ரூ. 52500.00 |
| நாடு அரிசி 1000kg ரூ.100000.00 | 01/06 நாடு அரிசி 800kg ரூ. 88000.00 |
| 01/06 சம்பா அரிசி 1000kg ரூ.120000.00 | 01/10 சம்பா அரிசி 500kg ரூ. 75000.00 |
| 01/15 சம்பா அரிசி 500kg ரூ.50000.00 | 01/20 நாடு அரிசி 700kg ரூ. 77000.00 |
| 01/25 சேவையாளருக்கான கொடுப்பனவு ரூ.20000.00 | 01/27 சம்பா அரிசி 1100kg ரூ. 165000.00 |
| 01/26 ஒரு மாதத்திற்கான மின்சார கட்டணம் ரூ.2000.00 | |
| 01/30 கடை கூலி ரூ.2500.00 | |

மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கு விபரங்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஜனவரி மாதம் 08ம் திகதி சம்பா அரிசி 50kg விற்கப்பட்டிருப்பினும் அது கணக்கிலப்படவில்லை. வரவு ரூ. 7500 ஆகும்.

1. மேல் காணப்படும் கணக்கு விபரம் எழுத்து மூலம் பதிவு செய்வதினால் சமன் பெரேராவால் முகங்கொடுக்க வேண்யெ பிரச்சினைகள் 05 தருக.
2. மேல் காணப்படும் கணக்கு விபரத்தினை மின் விரிதாள் மென்பொருளில் பதிவு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் 05 தருக. (இதற்காக பெரியோர்களின் உதவியை பெற்றுக் கொள்ளலாம்.)

➢ இப்பாடத்தின் இறுதியில் மின்விரிதாள் மென்பொருளினை பயன்படுத்தி தரவு பரிமாற்றம் செய்யும் திறனை பெறுவீர்கள். அவ் அறிவினை பயன்படுத்தி சமன் பெரேராவின் வியாபாரத்தில் ஜனவரி மாதத்திற்கான முழு வரவு, முழு செலவு மற்றும் இலாபம் என்பவற்றை கண்டறிக. அதற்காக கீழ் காணப்படும் மாதிரி அட்டவணையொன்றை பயன்படுத்திக் கொள்க.

## வரவு செலவு அட்டவணை

| திகதி | கணக்கு வழக்கு விபரம் | வரவு | செலவு | இலாபம் |
|---|---|---|---|---|
| | | | | |
| 01/31 | மாதாந்த இலாபம் | - | = | |

- கவனிக்க வேண்டியவை : வரவு - செலவு = இலாபம்